*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p320-332** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# நா.பார்த்தசாரதி நாவல்களில் பொருளாதார முரண் மற்றும் வாழ்வியல் நிலைபாடுகள்

Economic Contradictions and Perspectives on Life in Na. Parthasarathy's Novels

**க.ஷ்யாம் பிரகாஷ்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : BDU2110632779480. தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, கரூர்-639005. பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.*
**K. Shyam Prakash*,**
*Research Scholar of Tamil, Reg. No.: BDU2110632779480, Government Arts College, Karur-639 005.*
*Affiliated to Bharathidasan University, Thiruchirapalli, Tamil Nadu, India.*
***ORCiD:*** *https://orcid.org/0009-0002-0358-1763, EMail: shyam96528@gmail.com*

**முனைவர் இரா. சுப்ரமணி,**
*இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, கரூர்-639 005.*
*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.*
**Dr. R. Subramani,**
*Associate Professor of Tamil, Government Arts College, Karur-639 005.*
*Affiliated to Bharathidasan University, Thiruchirapalli, Tamil Nadu, India.*
***ORCiD:*** *https://orcid.org/0009-0002-2265-4964. Email: tamilsubbu1998@gmail.com*

*Article history*
Received: 10-08-2026
Revised: 10-08-2026
Accepted: 12-08-2026
**Published: 13-08-2026**
Corresponding Author Email: shyam96528@gmail.com

**Abstract:** Pleasure and pain are inextricably intertwined in human life; similarly, contradictions and harmony operate in unison. Marxist critics approach literature by viewing individual actions as integral components of an economic system. The writer positions himself as both a social scientist—meticulously analyzing societal conditions—and a social reformer. Na. Pa. (Na. Parthasarathy), who embodied these qualities, fully recognized the pivotal role of economics in social progress and illustrated this through his novels. Just as literary works are re-read and adapted to suit changing times, the society that prioritizes economic realities takes precedence within the literary landscape.

**Keywords:** *Pleasure and pain, intertwined, contradictions, harmony, Marxist critics, literature, individual actions.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனுடைய வாழ்வில் இன்பதுன்பங்கள் இரண்டறக்கலந்தவை. அதுபோல முரண்பாடுகளும் ஒத்திசைவும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. தனிமனிதனின் நடவடிக்கைகளின் ஒரு பொருளாதாரத்தின் பகுப்பாக இலக்கியத்தை அடிப்படைத்தன்மையைக் கருத்தில் அணுகும் முறையில் கொண்டு மார்க்சியத் திறனாய்வாளர்கள் இலக்கியத்தைப் படைக்கின்றனர். எழுத்தாளன் சமூக நிலவரத்தை நுட்பமாக அலசி ஆராயும் சமூக விஞ்ஞானியாகவும் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்கின்றார். இத்தகு சிறப்பினைப் பெற்ற நா.பா. சமூக முன்னேற்றத்தில் பொருளாதாரம் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது என நன்கறிந்து அதனை நாவல்கள் வழி காட்டிச் சென்றுள்ளார். இலக்கியங்கள் காலத்திற்கேற்ப மறுவாசிப்பு செய்து புதிதாகத் தகவமைத்துக் கொள்வது போல் இலக்கியத்தளத்தில் பொருள் நிலையை முன்னிறுத்தும் சமூகம்தான் முதன்மை பெறுகின்றது.

**முன்னுரை**

மார்க்சியம் ஒவ்வொரு எழுத்துக்கும் அறம், பயன், நோக்கம் இருக்க வேண்டுமென்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறது. எல்லாப் பொருட்களும் முரண்படும் அமைப்பு கொண்டவை. உடன்பாடு, எதிர்மறை என்ற இரு கூறுகளும் எப்பொழுதும் ஒன்றாகச் சேர்ந்தே வினைபுரிந்து செயலாற்றுகின்றன. எதிர்மறையிலும் உடன்பாடு இணைந்தே செயல்படுகின்றது. அறிவியலில் மின்சாரத்தின் இயக்கமானது நேர்மின்னூட்டம், எதிர்மின்னூட்டம் ஒருங்கே இணைந்து செயல்திறனைக் காட்டுவது போலவும் மனித உடலில் இரத்தத்தில் சிவப்பணுக்கள், வெள்ளணுக்கள் கூட்டமைப்பால் ஏற்படும் மாற்றம்போல் பொருள் நிலையும் வாழ்வியல் முறைகளும் ஒன்றையொன்று சார்ந்து பின்னிப்பிணைந்து நடைபெற்று வருகின்றன

1.மார்க்சிய அழகியல்- **Marxist Aesthetics**

2.பொருளாதார நிலை- **Economic Conditions**

3. சமூக வளர்ச்சி-**, Social Development**

4.இலக்கியத் திறனாய்வு- **Literary Criticism**

**நாவல் இலக்கியம்**

இலக்கியங்கள் வாயிலாக மக்களின் வாழ்க்கை முறைகளையும் பொருள் பற்றிய சிந்தனைகளையும் அறிய இயலுகின்றது. இவ்வியல் ஆய்வு மார்க்சிய அழகியலை மையமாகக் கொண்டு அமைகின்றது. பொருளுரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய அறிவியல் வளர்ச்சியினால் மனிதர்களையும் அவர்கள் வாழும் முறைகளையும் அறிந்து கொள்ள கல்வித் துறைகளான சமூகவியல், உளவியல், மானிடவியல், வரலாற்றியல், பொருளாதார இயல், மொழியியல், நாட்டுப்புறவியல் எனப் பலவாறான துறைகள் பல்கிப் பெருகி செழித்து வளர்ந்து வருகின்றன. இதன் மூலம் இலக்கியத்தோடு வாழ்வியலை இணைத்துப் பார்க்கும் நோக்கமும்

வளர்ச்சியடைந்து வந்துள்ளன. காரணம் மக்களிடத்தில் இலக்கியமும் ஒரு சமுதாய நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் விளைவுதான். 1917-இல் உருசியாவில் தோற்றம் பெற்ற சோசலிசப் புரட்சியின் விளைவாக லெனின் தலைமையில் உலகம் முழுவதும் மார்க்சியச் சிந்தனைகள் வேகமாகப் பரவின, அச்சிந்தனைகள் பொருளாதாரம், குடும்பம் சமூக நிறுவனங்களான சமயம், அரசியல், முதலான அனைத்தையும் அறிவதற்கான களத்தை அமைத்துக் கொடுத்துள்ளன.

திணைசார் குடிகளின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பொருளாதார ஒழுங்கமைவுகளைப் பரிசீலிக்கும் போது நானிலத்தாரது வாழ்வியல் அணுகுமுறைகளை ஆராய்வது அவசியமாகின்றது. செயற்பாடுகளுக்குச் சங்ககாலச் கருப்பொருளாகிய நிலமே சமூகத்தின் அடிப்படை பொருளாதாரச் ஆதாரமாகக் கொள்ளப்பட்டது. திணைக்கோட்பாட்டினை ஆராய்வதில் சிக்கல் இருப்பினும், திணைப் பகுப்பிற்கு நிலமும் கருப்பொருளுமே முதன்மை ஆதாரமாகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் தொழில் முறைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அந்நில அமைப்புக்கும் வளமைக்கும் ஏற்ற தொழிலைச் செய்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர். திணையும் திணைசார் ஒழுக்கமும் மக்களின் பொருளாதாரப் பயன்பாட்டைக் கொண்டே நிர்ணயம் செய்யப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் மழை வளம் பெருகும் காலத்து செழிப்பையும் மழை வளம் குன்றிய காலங்களில் செழிப்பின்மையையும்; எதிர்கொள்கின்றனர்.

மழையில்லாப் பருவங்களில் அந்நிலப் பகுதிகள் அனைத்தும் வறண்டு பாலை நிலமாகக் காட்சியளிக்கும். நாட்டில் வறட்சி நிலவுங்காலத்து வறுமை தோன்றுவது இயல்பு. நெய்தலாகிய கடலும் கடல் சார்ந்த பகுதியும் கூட மழை பெய்யாவிட்டால் தன்னுடைய நீர்மட்டத் தன்மையிலிருந்து குறைந்து மாறுபட்டு நிற்குமாம். இதனையே வள்ளுவர், **“நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி தான்நல்கா தாகி விடின்”1 என்று கூறுகின்றார்**.

மாக்கடலும் தன்னுடைய ஆளுமைத் தன்மையிலிருந்து மாறுபடக்கூடிய நிலை ஏற்படும் போது மாந்தர்களின் பண்பும் வறுமையால் பொருளாதார முரண்பாடுகளைச் சந்திக்கக் கூடிய நிலையைக் கட்டாயம் அடைவர் என்ற நியதியை வள்ளுவம் எடுத்துக்காட்டுகின்றது. பொருளாதார மேம்பாட்டிற்கு நிலமும் நீர்நிலையும் தட்பவெப்பநிலையும் அடிப்படையான மூலாதாரங்களாகும். இதனைக் குறித்த செய்திகளைச் சங்க நூல்களும் எடுத்தியம்புகின்றன. தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் ஐவகை நிலப்பாகுபாடுகளை வரையறை செய்கின்றன. நம் தமிழ்நாட்டில் பாலை நிலம் என்றொரு தனியான நிலம் கிடையாது. பாலை வனங்களான தார், சகாரா போன்ற நில அமைப்புகளும் இல்லை. குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து, இயல்பு நிலையிலிருந்து மாறுபட்ட தன்மையே பாலை நிலமெனக் கூறப்பட்டுள்ளது. நாவல் இலக்கியம் இலக்கிய வகைமைகளில் நாவல்களில் ஒன்றிக் கிடக்கும் முரண்பட்ட பாத்திரப் படைப்புகளால் வாசகர்கள் மனம் வேறுபாடு, சிக்கல் என்ற கண்ணோட்டத்தை மாற்றியமைத்துக் கொண்டு முரண்பாடுகளுக்கு ஏற்ற வகையில் தீர்வுகளை முன்வைப்பது தான் அரிய முயற்சியாகும் எனவும் நடைமுறையில் சிக்கலைத் தீர்க்கக் கூடிய சாத்தியக் கூறுகளைப் புது உருவாக்கம் தந்து, காலத்துக்கும் அது பொருத்தப்பாடுடைய நிலைபாட்டைக் கணிப்பது தான் சிறந்த வெற்றி எனக் கூறுவது சாலச்சிறந்தது. இந்நிலைபாட்டைக் கருத்தில் கொண்டு இலக்கிய ஆராய்ச்சியின் அவசியத்தை உணர்ந்த

ஆராய்ச்சியாளர்கள் சமுதாய நலன் விரும்பிகளாகத் தொண்டு செய்து வருகின்றனர். கிறித்துவ சமயத்தின் சீர்திருத்தவாதிகளான மார்டின் லூதர், ஸ்பென்சர், மில்டர் போன்றோர் மனிதச்சீரழிவு கோட்பாட்டின் வேகத்தை மாற்றி மனித மாண்புகளுக்கு முக்கியத்துவம் அளித்தனர். மார்க்சியக் கொள்கையில் „மனிதம் என்பது மனிதன் தன் வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் ஆற்றலை அவனுக்கு வழங்கவும் அற நன்னெறி பற்றி அறியவும் அவற்றின் செயல்பாடுகளை வியந்து கூறுவதுமாகும்" என்கிறார் மார்க்சிம் கார்க்கி. „மனிதனைவிட சுவையான நுண்ணிய சுவாரசியமான ஒன்றை நான் அறியேன்" என்றும் கூறுகின்றார். இவ்வகையில் நா.பா. மனிதனின் உயர்ந்த குணநலன்களைப் பாராட்டியும் குறைகளைச் சுட்டிக்காட்டியும் குற்றமில்லா மனிதன் இவ்வுலகில் எவருமில்லை என்ற நுட்பத்தைக் கூறி மெய்ப்பொருளை அறியச் செய்துள்ளார். இலக்கியத்தில் தோன்றும் சமூகச்சிக்கல்கள், புரியாத புதிர்கள் போன்றவை இல்லையென்றாலும் இலக்கிய வாசிப்பில் சுவை தோன்றாது. ஆதலால் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. எனவே, இலக்கியப்படைப்பில் இன்று நிலவுகின்ற, நாளைக்கு எதிர்வரப் போகின்ற சிக்கல்களைக் கணக்கில் கொண்டு படைக்கும் படைப்புகளும் சமுதாயத்திற்குப் பயனளிக்கின்றன.

சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்கள் பொருளாதாரப் பின்புலத்தின் தன்மையை அளந்து காட்டுவதாகவே அமைந்துள்ளன. நாட்டின் பொருள் நிலவரங்களைப் பற்றித் தெளிவாகக் கூறும் ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் இதற்குச் சான்றுகள் பகர்கின்றன. நடப்பியல் உள்ளவாறே உண்மைகளையும் வரலாற்றுச் செய்திகளையும் இலக்கியம் அமைத்துக் கொடுப்பதில்லை. கலை வடிவமாக மாறும்போது படைப்பாளன் அவனுடைய சூழல், நலன், நோக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வதால் அவற்றுள் மெய்மைகள் பிரதிபலிக்கின்றன. இலக்கியங்கள் கூறுகின்ற உண்மைத் தன்மைகளைப் பிற சான்றுகளோடு இணைத்துப் பார்க்கும் போது ஒத்திசைவும் முரணும் முக்கியமாகப் பங்காற்றுகின்றன. சமுதாயச் சூழ்நிலைகளின் பின்னணியிலேயே மார்க்சும் இலக்கியங்கள் பொருளாதார எங்கல்சும் ஏற்ற மக்களை மதிப்பீடு இறக்கங்களையும் எடுத்துக்காட்டக்கூடிய ஓர் அழகிய கலைவடிவமாகும். செய்கின்றனர். விளைவுகளையும் மார்க்சியம், அடிப்படையில் ஓர் அரசியல் - பொருளாதார - சமுதாய தத்துவமே. இதன் சிற்பிகளான காரல்மார்க்சும் பிரடெரிக் எங்கல்சும்பின்னர் விளாதிமிர் லெனினும் இலக்கியக்கோட்பாட்டில் ஒன்றிணைந்தவர்களாவர். இவர்கள் இலக்கியம் பற்றிய ஞானத்தோடும் ஆழ்ந்த மனிதனின் பண்பு கெடாமல் பொருள் நிலைக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறையாகும். நிலைபாட்டை ஆராய்வது ஆய்வின் நோக்கமாகும்

**பொருளாதாரம்**

பொருளாதாரம் என்ற சொல்லே குடும்பத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது. கிரேக்க மொழியில் „ஆய்கோனோமியா"„ என்ற சொல் வீட்டு நிருவாகம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது. கிடைக்கும் நிதியைக் கொண்டு சிக்கனமான முறையில் எவ்வாறு குடும்பத்தை நிர்வகிப்பது என்பது பற்றிக் கவனம் செலுத்துவதே, „பொருளாதாரமே சமூகத்தின் „ஆய்கோனோமியா" அடித்தளம்" என்பதாகும். என்று மார்க்சியர்கள், வலியுறுத்துவர். பொருள் முதல்வாதிகளுக்கும் கருத்து முதல்வாதிகளுக்கும் எது அடித்தளம் என்பதில் கருத்து மோதல்கள் இருந்துவரினும் மனிதவாழ்வில் பொருளே பெரும்பங்கு வகிக்கிறது.

**"மனித வாழ்வுக்கு உணவு மட்டும் போதாது என்பது உண்மைதான். ஆனால் ரொட்டி அல்லது அதைப் போன்ற உணவு இல்லாமல் வாழக்கூடிய ஒரு மனித இனம் இன்னும் தோன்றவில்லை. கிறித்தவர்களின் இறையியல் கொள்கை உலகின் பொருள் முதல் தன்மைகளைப் பாராட்டாமல் கருதினாலும் ஆத்மாவை மட்டுமே உணர்வுடன் „எந்தனுடைய ரொட்டியை இன்று தா" என்பதே அவர்களுடைய உணர்த்தும்."2** என்கிறார் டி.டி.கோசாம்பி. மேலும், அன்றாடப் பொருளின் இன்றியமையாமையை „உணவு உற்பத்தியாளரின் தேவைக்கு மேல் கிடைக்கக்கூடிய உபரி உணவு தாம் சம்பிரதாயமான எந்தப் பண்பாட்டிற்கும் அடிப்படையாகும்" என உணவே பிறவற்றிற்கும் மூலமானது என்று விளக்கிக் கூறுகிறார். உபரி உபரி உணவு தான் பொருளாக மாற்றம் பெறுகின்றது. இந்தப் பொருளே பண்பாட்டுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. அதற்கு உற்பத்தியே பொருளாதார அமைப்புக்கு அடித்தளம். அதன் மீது பல மேற்கட்டுமான மேல் தளங்கள் அமைகின்றன. சமூக உறவுகள், கருத்துகள், நிறுவனங்கள், தத்துவங்கள் ஆகியன உருவாகின்றன என்னும் இக்கருத்து அதனை உறுதி செய்கிறது.

**"சமூகப் பொருளாதார அமைப்புகளின் வளர்ச்சி மாற்றங்கள் இவற்றின் வரலாறே சமூகத்தின் வரலாறாகும்" 3** எனவேதான் இதன் முதல் பயன்பாட்டுத்தளமாக அறியப்படுகின்ற குடும்பம் சமூகவியலாளர்களாலும் பிறராலும் மிகுந்த பொறுப்புணர்வோடு பார்க்கப்படுகின்றது என அறிய முடிகின்றது.

**பொருளாதார முரண்**

மனிதனுடைய வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் நிலைத்த இடத்தைப் பெறுவது போல் முரண்பாடுகளும்; நடைபெறுகின்றன என்கின்றனர் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள். இலக்கியத்தில் தோன்றும் சமூகச் சிக்கல்கள், புரியாத புதிர்கள் இல்லையென்றாலும் இலக்கியம் வாசிப்பில் இவைகள் இன்றியமையாத இடத்தைப் பெறுவதில்லை. எனவே இலக்கியப் படைப்பில் அடிப்படையில் ஒரு சமூக விஞ்ஞானியாகத் தன்னை வளர்த்தெடுத்துக் கொள்வதன் மூலமாகச் சமூகத்தில் நேற்று நிலவிய, இன்று நிலவுகின்ற, நாளைக்கு நிலவப் போகின்ற சிக்கல்களை எல்லாம் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியத் திறம் பெற்றவராக விளங்க வேண்டும். இதைத்தான் நாம் சமூக அக்கறை என்கிறோம். சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் மிக ஆழமான நுட்பமான புரிதல் வேண்டும் இதனையே எங்கெல்ஸ்.

"**சமுதாய முரண்பாடுகளுக்கு வரலாற்று முறையிலான தீர்வுகளை, எழுத்தாளன் தட்டிலே வைத்துத் தருவது போல மிக வெளிப்படையாக முன் வைக்க வேண்டியதில்லை. படைப்பாக்கத்தின் போக்கில் அது ஏற்படுத்தும் சூழ்நிலை, செயல்கள் முதலியவற்றின் ஊடே தானே பொதிந்து வைத்துக் தொனிபோலப் புலப்படுமாறு தீர்வுகளை முன் வைக்க வேண்டும்."4** என்கிறார்.

இலக்கியம் இதயத்தோடு பேசுகிறது. இதயத்துக்கு இதமான இலக்கிய அழகியல் சிதைந்து விடாதபடிச் சிக்கல்களுக்கான வழிமுறைகளையும் அதில் சுட்டிக்காட்ட வேண்டுமென்கின்றனர் திறனாய்வாளர்கள். க.கைலாசபதி போன்ற மார்க்சியத்

"பிரச்சினைகளை மேலும் மேலும் கூர்ந்து நோக்கி ஒவ்வொன்றிலும் காரண காரியத் தொடர்புகளை விளக்கிக் கொண்டு எழுதும் போது அவற்றை நீக்க வழிவகைகளையும் வேண்டிய விவரித்தல் அவசியத்தையும் தவிர்க்க இயலாதே. அதற்கான நோயை நுணுக்கமாக விளக்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினால் மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்கமும் வேண்டாமா?"5

என்று கூறுவதன் மூலம் பிரச்சினைகளை மட்டும் கூறாமல் இலக்கியத் தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்ற விதம் புலப்படுகின்றது. நா.பா. நாவல்கள் பெரும்பாலும் பொதுவுடைமையையும் பொருளாதாரத்தையும் மையமிட்டு வழிநடத்திச் செல்கின்றன. இக்கொள்கைகள் மார்க்சியத்தின் கருத்துக்களை எடுத்துக்கூறி தீர்வுகளுக்கு வழிவகை செய்கின்றன. மார்க்சியமானது பொருளாதாரச் சமுதாய முரண்பாடுகளைக் களைவதன் நிலைபாடாகும். "வாழ்க்கை படிப்படியாக வளர்ச்சியுறும் தன்மையுடையது என்பது மார்க்சின் கொள்கை. மனித வரலாற்றில் எல்லா வளர்ச்சிகளும் முன்னேற்றங்களும் பொருளாதார வளர்ச்சி முறையாலேயே ஏற்பட்டனவாகும். மனித சமுதாயம் வர்க்க வேறுபாடற்ற சரிநிகர் சமான நிலையை நோக்கிச் சென்று எய்துவதாகும்"6 முடிவில் அந்நிலையை அது என்று தா.ஏ.ஞானமூர்த்தி கூறுகிறார். இலக்கியங்கள் வாயிலாகவும் பொருளாதார நிலையைப் பற்றி அறிய முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள். இலக்கியமும் வாழ்வும் இலக்கியக்கொள்கை உருவாவதற்கு இருவர் காரணமாக அமைகின்றனர்.

**இலக்கியமும் வாழ்வும்**

இலக்கியக்கொள்கை உருவாவதற்கு இருவர் காரணமாக அமைகின்றனர். ஒருவர், படைப்பாளி, மற்றொருவர் திறனாய்வாளர். படைப்பாளி வாழ்க்கையிலிருந்து தான் படைக்கும் இலக்கியத்தின் மூலமாகக் கொள்கைகளை முன் வைக்கின்றார். திறனாய்வாளர் தான் திறனாயும் கொள்கைகளை வகுத்தளிக்கிறார். இலக்கியம் பற்றிய உரையாடல் மூலம் இலக்கியங்கள் மூலம் நாட்டில் நிலவும் பொருளாதார நிலையைப் பற்றி அறியமுடிகின்றது.

**"இலக்கியம் ஒரு காலத்திற்குரிய சிறப்புப் பண்புகளை அவ்வாறே பொறிக்கிறது. அக்காலப் பழக்க வழக்கங்களை ஓவியம் போல் சித்திரித்துத் திறம்பட வெளியிடுகிறது. வாழ்வின் சித்திரத்தைப் பிற்காலத்தவருக்கு வழங்குகிறது"7** என்ற கூற்றுகளின் படி பொருளாதாரச் சூழலைக் கணிக்க முடிகின்றது. உண்மையான பொன்விலங்கு நாவலில் மல்லிகைப்பந்தல் கல்லூரியில் சத்தியமூர்த்தியுடன் பணியாற்றும் பொருளாதார விரிவுரையாளர் தம் இயலாமையை விளக்குவதாக நா.பா உணர்த்தியுள்ளார். "இந்த உத்தியோகத்தில் ஒரு சுகமும் இல்லை. ஏதோ வேறு வழி இல்லாத காரணத்தால் கல்லூரி ஆசிரியராக வந்து மாட்டிக் கொண்டுவிட்டேன். ஏதாவது ஒரு கம்பெனியில் சின்ன உத்தியோகம் பார்த்துக் கொண்டு போயிருந்தால் கூட இதற்குள் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்திருக்கும்"8 என்ற பொருளாதாரத்தின் பயனை நன்கறிந்த விரிவுரையாளரே சத்தியமூர்த்தியிடம் அலுத்துக் கொள்கிறார். „வாழ்க்கையே பணத்தைக் கொள்ளையடித்துக் குவிப்பதற்காக அளிக்கப்படுகிற ஒரு சந்தர்ப்பம்"; என நினைக்கக் கூடிய அளவிற்கு அவரிடம் பொருளாதாரச் சூழல் அமைந்திருக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் பொருள் நிலையில் பின்தங்கியிருக்கும் போது வாழ்வில் ஏற்படும் பல தடுமாற்றங்கள் அவர்களைச் சோதிக்க வல்லன என நாவல் வழி அறியமுடிகிறது. சத்தியமூர்த்தியின் தந்தை பொருளாதாரப் பின்னடைவிலிருந்து நீங்க வேண்டுமானால் தன் மகன்

நல்ல வேலைக்குச் சென்று குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறார். குடும்பப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு குடும்பச் சுமை முழுவதையும் தன் மகன் சத்தியமூர்த்தியிடம் ஒப்படைக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட தந்தையைக் கூட அவன் கேவலமாக எண்ணுவதைத் தவிர்த்தான். இதுபோன்ற சிறந்த நாகரிகம் அவனிடம் குடிகொண்டுள்ள பாங்கு வியக்கத்தக்கதாகும். இதனையே பொற்கோவும் தமது ஆராய்ச்சி நெறிமுறை நூலில் „பதவியும் பட்டமும்" என்ற தலைப்பில், "மிகுந்த அக்கறையோடு ஆய்வில் பட்டம் வேறு. பதவி வேறு. இன்றைய காலச் சூழலில் ஒருவன் பெற்றிருக்கிற அறிவுக்கு அடையாளமாகப் பட்டம் தேவைப்படுகிறது."9 எனக் கூறுவதிலிருந்து தகுதிக்கேற்ற வேலை கிடைக்கவில்லையென்றாலும் கிடைத்த வேலையை வைத்துக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும் மனம் தளரக்கூடாது என்று அறிவுறுத்துகின்றார்.இளைஞர்கள் தாம் வேலைக்கு வருவதற்கு முன்பே எத்துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம் என்ற நிலைபாட்டைத் துறைசார்ந்த வல்லுநர்களிடம் கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும். வேலைக்கு வந்த பின்பு வேலையில் நாட்டமின்றி ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்ற இரு வகையான நிலை ஏற்பட்டு, செய்கின்ற வேலையையும் முழு மனதோடு முழுமையாகச் செய்ய முடியாமல்,கிடைத்த அந்த வேலையிலும் நீடித்து நிற்க முடியாமல் திண்டாடக் கூடிய நிலை உருவாகும் என்று நா.பாவிற்கு இணங்க பொற்கோவும் பரிந்துரைக்கின்றார். மேலும் தாய்மொழிவழிக்கல்வி ஒருவனை ஒப்பற்றவனாக மாற்றும் தன்மையுடையது எனத் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் இருவரும் தம் ஒத்த கருத்தை எடுத்துக் கூறுகின்றனர். "எந்த அறிவுத்துறை வளர வேண்டுமானாலும் அதற்கு மொழி உதவவேண்டும். மொழியின் உதவியில்லாமல் எந்த அறிவுத் துறையும் வளர முடியாது. ஒருவன் பெற்றிருக்கிற அறிவை மற்றவர்களுக்கு வழங்கவும் மொழி வேண்டும்.

**ஒரு குறிப்பிட்ட துறையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் ஒருவன் மொழியின் உதவி இல்லாமல் வளர இயலாது. ஆராய்ச்சியில் மொழிக்கு இருக்கின்ற இன்றியமையாத இடத்தை யாரும் மறுக்க முடியாது."10** என மொழியின் இன்றியமையாத தன்மையை விளக்குகிறார்.

**செயல்வழிமுரண்**

பழமையும் புதுமையும் கலந்த நிலையாக, தோற்றத்தில் பழமையும் கருத்தில் புதுமையும் கொண்டு விளங்குகிறாள் மங்களேசுவரி அம்மாள். பணவளம் படைத்திருந்தும் பொருளாதார ஏற்றத் தாழ்வைக் கருதாமல் மகள் வசந்தாவைத் தொழிலாளியான முருகானந்தத்திற்கு மணம் முடிக்கிறாள். ஏழையான பூரணியைத் தன் மகள் போலப் போற்றுகிறாள். அன்புடன் தான் நிதியாகப் பொதுமக்களுக்குத் தருவது கூட வெளிப்படலாகாது என்றும் விளம்பரம் விரும்பாத எளிமையும் கொண்டு திகழ்கிறாள். ஆனால் பணத்தால் சிறப்புப் பெற்றிருந்தாலும் குணத்தால் இழிநிலையுற்று முரட்டுத்தனமும் ஆணவமும் கொடுமைக் குணமும் கொண்டு வாழ்கிறார் பர்மாக்காரர். **"இருவர் நிலை வேறுபாடும் அரவிந்தன் சிந்தனையாக முகிழ்;க்கிறது"11**

"**ஆத்திரப்படுவதனால் மனிதர்களைத் திருத்த முடியாது. மாறாக அவர்களை இன்னும் கெட்டவர்களாக வளர்க்கத்தான் ஆத்திரம் பயன்படும்."12** என்ற கொள்கையுடைய அரவிந்தன் காந்திய நெறியில் தம் வாழ்வை அமைத்துக் கொள்கிறான். பர்மாக்காரர் தன்னை ஆள் வைத்து அடித்துத் துன்புறுத்தினாலும் அவனுடைய கீழ்மைக்குணம் தனக்கு வரக்கூடாது என்று உறுதியோடு இருக்கின்றான் ஆனால் அவன்; நண்பன் முருகானாந்தம், **"இன்றைய வாழ்க்கையில் கருணை**

**காட்டுகிறவர்கள் தோற்கிறார்கள். கன்னத்தில் அறைகிறவர்கள் வாழ்கிறார்கள்."13** என்று தன் நண்பனுக்காகப் பரிந்து பேசுகிறான். இந்தக் காலத்தில் அடிக்கு அடி கொடுத்தால் தான் பிழைக்க முடியும் என்ற சித்தாந்தம் உடையவனாகக் காணப்படுகின்றான். தன் நண்பனுக்கு ஆறுதலாக இருந்து தன் தார்மீகக் கோபத்தைக் காட்டுகிறான். **"அரவிந்தன் பர்மாக்காரர் மாளிகையில் அடியாட்களால் தாக்கப்பட இருந்தபோது எதிர்க்க நினைக்கிறான். எதிர்க்க இயலவில்லை. எதிர்க்க நேராதவாறு சூழல் தடுத்து விடுகிறது. முருகானந்தமோ இந்த முரட்டுத்தனத்தையே வீரமாக்கிக் கொண்டான்."14 என நா.பா**. தம் ஒரே படைப்பில் இளைஞர்களின் முரண்பட்ட இரு வேறு வாழ்வியல் கோட்பாடுகளைக் காட்டுகிறார்.

பொன்விலங்கில் சத்தியமூர்த்தியின் தந்தை அவருடைய விருப்பத்திற்கு இணங்க இவன் பட்டயக்கணக்கர் படிப்பில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். காரணம் அத்துறைப் படிப்பில் சம்பள விகிதம் அதிகம். தமிழ் இலக்கியம் படித்தால் நிறைய சம்பளம் வாங்க முடியாது. பணம் கொழிக்கும் பிற துறையைச் சார்ந்த பட்டயக்கணக்கர், கணக்காளர் போன்ற படிப்புகள் தான் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்றார். அவ்வாறு அவன் சம்பாதித்துக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆவல் கொள்கிறார். ஆனால் சத்தியமூர்த்தி தான் விரும்பிய தமிழ் அறிஞர் படிப்பையே தேர்வு செய்து படிப்பையும் முடித்து வேலைக்குப் போகத் தயாராகி விட்டான். இருப்பினும், அவனுடைய தந்தையின் சொல்லை மதிக்கவில்லை என்று அவர் உள்ளத்தில் கசப்பைச் சுமந்து கொண்டு இருக்கிறார். இதன் விளைவாக அவனைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் வேண்டாவெறுப்பான சொற்களைக் கூறி வசை பாடுகிறார். குடியிருக்கும் வீடு மிகப்பழமையானதால் அதைப் புதுப்பிக்க வேண்டும். தங்கைகளுக்குத் திருமணம் நடத்த வேண்டும் என்ற கட்டாயத்தில், தன் பொறுப்பைத் தட்டிக்கழித்த அவன் தந்தை, மூத்த பிள்ளையான சத்தியமூர்த்தியிடம் பொறுப்புகளை ஒப்படைக்கிறார். அவர் மிகுந்த பணநெருக்கடிக்கு ஆளானதால் மனதிற்கு உகந்த தமிழ்ப்படிப்பைத் தாழ்வாகப் பேசுகின்றார். இருப்பினும், அவன் இலட்சியத்தைக் கைவிடாமல் மல்லிகைப் பந்தல் கல்லுரியில் வேலைக்குச் சேர்கிறான். அந்தத்தொழில் அவனுக்கு மிகவும் பிடித்திருந்ததால் வேலையில் கண்ணுங்கருத்துமாக நின்று கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குப் படிப்பை மட்டும் சொல்லிக் கொடுக்காமல் வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்க நெறிகளையும் கற்றுக் கொடுத்து வழி நடத்துகின்றான். அவன் தந்தையோ ஆசிரியர் தொழிலில் கிடைக்கும் குறைந்த வருவாயைக் கொண்டு விரைவில் முன்னேற்றம் காண முடியாது என்று கூறுகின்றார். **"நான் அப்போதே படித்துப் படித்துச் சொன்னேன். நீ கேட்டால் தானே? தமிழ் ஆனர்ஸைத் தவிர வேறு எந்தப் பிரிவில் சேர்ந்திருந்தாலும் இதற்குள் நல்ல உத்தியோகத்தைத் தேடிக் கொண்டு போயிருக்கலாம். எல்லாவற்றுக்கும் பணம் வேணும்டா, பணம். சும்மா வறட்டு இலட்சியம் திருமணத்துக்கு பேசி நிற்கிற ஆகப் இந்தப் போவது ஒன்றுமில்லை. பெண்களையும் வீட்டுக் கவலைகளையும் நினைத்து இராப்பகலாக நான் தூக்கமின்றி மாய்வது உனக்குத் தெரியுமோ, எத்தனை நாட்களுக்கு இப்படி இருக்கப் போகிறாய் நீ?"15** என்று அவன் தந்தை பொருள் பற்றிய நிலைபாடுகளை எடுத்துக் கூறுகிறார். பொருளாதாரப் பற்றாக்குறையால் ஏற்படும் முரண்பாடு மனிதனின் அளவற்ற ஆசையின் காரணமாகத் தோன்றுகின்றது. உழைப்பிற்கேற்ற

ஊதியம் கிடைத்தாலும் அதனை வைத்துக் கொண்டு எளிமையாக வாழ்வதன் மூலமே சுகமாக வாழலாம் என்ற கொள்கை நா.பா. வழி இங்கு நிர்ணயிக்கப்படுகின்றது.

பிள்ளைகளை அதிகம் பெற்றுக் கொள்ளாமல் இரண்டு பெற்றால் இன்பமயம், ஒன்று பெற்றால் ஒளிமயம் என்று வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய கட்டுப்பாடுகளைக் கொண்டு, வாழ்ந்திருந்தாலே பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளலாம் என்ற சமூக நலனை முன் வைக்கின்றார் நா.பா.

**அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும்**

மானிடர்களின் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுக்கும் நிலையில் அகவாழ்க்கை மனம் சார்ந்தும், புற வாழ்க்கை பொருள் நிலையைச் சார்ந்தும் அமைந்துள்ளன. வாழ்வின் இருபெரும் பிரிவுகளான மண்ணுலக வாழ்வையும், விண்ணுலக வாழ்வையும் குறிப்பிட்டுக் கூறுவதானால் மண்ணுலக வாழ்க்கைக்குப் பொருள் மூலாதாரமாகவும் விண்ணுலக அதாவது ஆன்மீக அருள் வாழ்க்கைக்கு அறமும் அறம் சார்ந்த மனதின் தூய்மையும் அடிநாதமாகக் கூறப்பட்டுள்ளது. பொருட்செல்வம் துறவறத்தார்க்குத் தேவைப்படாது. ஆனால் இல்லறத்தார்க்கு மிகவும் அவசியமானதாகும். பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இன்பத்தைத் தராது. ஆதாம் ஏவாளுக்கும் பொருள் பற்று ஏற்பட்டது. ஆசை அளவு கடந்து போகும் போது துன்பமும் அவர்களை விடாமல் பற்றிக் கொண்டது. பொருளாக்க மூலங்களில் மனிதவளமும், உடல் உழைப்பும், அறிவாற்றலும் உற்பத்தி மூலங்களாகச் செயல்பட்டு நிற்கின்றன. பொருளாதாரத்திற்கு எத்துணை முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதோ அதே முக்கியத்துவம் அறம் சார்ந்த, அறவழிப்பட்ட பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிகாட்டுகின்றனர் நம் சான்றோர் பெருமக்கள். திருவள்ளுவர், ஔவையார், காந்திமகான் போன்றோர் அறப்பொருளியலுக்கு அடிப்படைக் கருத்துக்களை முழுமையானவள்ளுவமும் காந்தியப்பொருளாதாரமும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய வள்ளுவர், முழுமையான வாழ்வியலின் நிலையான ஆதாரக் கருத்துக்களைக் கூறியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களுள் முதன்மையானது அறமெனக் கூறி அறவழியில் வந்த பொருளின் நிலைபாட்டை உறுதிசெய்து, அப்பொருளால் கிடைத்த இன்பத்தை முறையே நிறுத்தியுள்ளார். திருவள்ளுவரின் பொருளியல் கருத்துகள் வழிகாட்டும் சிறப்புகளைப் பெறுவது போல நாவல்கள் பொருள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. அறிஞர்கள் ஏற்றுக் பலரும் நா.பார்த்தசாரதியைப் பொருளியலறிஞராக கொண்டுள்ளனர். காரணம், நாவல்களில் வள்ளுவப் பொருளாதாரத்திற்கும், காந்தியப் பொருளாதாரத்திற்கும் பொருளியல் வல்லுநர் பா.நடராஜன், முக்கியத்துவம் அளித்துள்ளமையே ஆகும். **“எத்தகைய பொருளாதார அமைப்பு முறை இருந்தாலும்‧ கட்டிக்காக்க வேண்டிய‧ பின்பற்ற வேண்டிய சில நிலையான பொருளியல் விழுமங்கள் உள்ளன.”16** என்று கூறியுள்ளார். „இன்றைய காலத்தோடு ஒப்பிட்டால் சங்ககாலப் பொருளியல் எளிமையானதாகவும் தன்னிறைவு பெற்றதாகவும் இருந்தது" என்று என்.சுப்பிரமணியன் கூறுகின்றார். இதற்குக் காரணம் பழங்காலத்தில் மக்கள் தொகை குறைவாகவும்‧ வளமை அதிகமாகவும் இருந்தது என்பதை அறிவதற்குச் சான்றாதாரங்கள் துணை செய்வனவாக அமைந்துள்ளன. பொருள்‧ செல்வம் ஆகியவற்றை விரிவாக எடுத்துக்கூற வேண்டுமெனில் அவை சேரும் இடங்களும் சேர்க்கப்படும்

முறைமையும் ஆராய வேண்டுவது அவசியமானதாகும். மது˒ சூது˒ வரைவின் மகளிர் ஆகியவற்றை அறநோக்கில் கணிக்கப்படுமாயின் அவையனைத்தும் பொருளைத் தேய்க்கும் காரணிகளாகக் கூறப்பட்டுள்ளன. அறங்கூறும் அறவியல் மதிப்பீட்டுப் பொருளியல்˒ „தீதின்றி வந்த பொருளாக" மதிக்கப்படுகின்றது. பருப்பொருளை மட்டுமன்றி கல்வியை மதிப்புப் பொருளாகச் செல்வமாகக் கருதப்படுகின்றது. கல்வியென்ற மனச்செல்வம் ஆக்கமும் ஊக்கமும் தரவல்லது. கல்வியைப் பெருக்கி˒ மக்கள் நலனைக் கருவியாக்கி கல்விச் செல்வத்தைப் பணச்செல்வம் போல் வருவாயைத் தேடித்தருவித்து˒ நாட்டின் நலனைக் காப்பது தான் அனைவருடைய கடமை என்று நா.பா. வலியுறுத்துகின்றார்.

நாவல்களில்˒ தனிமனித வாழ்க்கையிலும் சமுதாய˒ அரசியல் வாழ்க்கையிலும் பொருளுக்குரிய இடம் முதன்மை வகிக்கிறது. பொருளியல் தாக்கம் குறித்து சிலவற்றை வெளிப்படையாகவும் சிலவற்றை மறைமுகமாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. புற ஒழுக்க அடிப்படையில் நின்று சூதாட்டம் ஆடுபவர்களைக் கடிந்துரைத்துள்ளார். நாவல்களில்˒ மதுவுடன் கைகோர்க்கும் சூது தீதானது எனக்கூறி „ஒன்றெய்திப்பின் நூறை இழத்தல்" என்பதன் வாயிலாக விளக்கமுறச் செய்துள்ளார். வளமான வாழ்விற்குச் செலவை வரவுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்ற எளிமையைப் புகுத்தி நிலையான மேலாண்மைப் பொருளியல் சார்ந்த கொள்கைகளுக்கு இடமளித்துள்ளார். „உழைப்பற்ற செல்வம்˒ நெறியற்ற வாணிபம் சமுதாயப் பாவங்களெ"னக் கூறிய பொருளியல் அறிஞர்களின் கருத்துகள் தனித்தன்மையோடு மனிதகுலத்தை வாழ்விக்கத் தக்கனவாக விளங்குகின்றன. அதேபோல் நா.பா.வின் கருத்துக்களும் மக்களை மலர்விக்க வந்த உன்னதமான படைப்புகளேயாகும். உழைப்பின் மூலம் வருவாயைத் தேடி வறுமையை ஒழித்து வாழ வேண்டிய முறைமையைக் கூறிச் சென்றுள்ளார். முரண்பாடில்லாத வாழ்வியல் முறைகளைப் பின்பற்றுவதால் மனிதன் உள்ளொளி பெருக்கி வாழ முடியும் என்கின்றார்.

**வளமும் வாழ்வும்**

„பொருடனைப் போற்றிவாழ்" „சோம்பித் திரியேல்" என்கிறார் ஔவைபிராட்டியார். இதுவே பொருளாதாரக் கொள்கையாகும். இருப்பினும், பொருள்பற்று கட்டுக்குள் அடங்கி இருக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்வு வளம் பெறும். உழைப்பே வறுமையை விரட்டியடிக்கக் கூடிய வலுவுள்ள கருவியாகும். பொருள் சேர்த்து விட்டோம் என்ற அகந்தையால் பிறரை வஞ்சிக்கக் கூடாது. அப்படி பிறரைத் தாழ்வாக எண்ணும் போக்குக் கண்டிக்கத்தக்கது. இதனையே, **"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ" 17** என்று பொதுவுடைமைக்கு விளக்கம் தருகிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். பொருள் பற்றிய ஆற்றல் விளைவுகள் இவ்வுலகில் மிகுந்து காணப்படினும் முடிவாகப் பணமே ஆதிக்கம் செலுத்துகின்றது.

பணம் நல்லதையும் செய்யும் கெட்டதையும் செய்யும். உலகில் பணப்பெருக்கத்தால் கெட்ட விளைவுகளே அதிகம் ஏற்படுகின்றன. ஆகவே˒ பணத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையைக் கார்ல்மார்க்ஸ் சுட்டிக்காட்டுகின்றார். இயக்கசக்தி அதிகமாகவும் செலவுதிறன் குறைவாகவும் பொருளாதாரச் சிக்கனம் கருதி வருவாய்க்குள் வாழும் வாழ்க்கையை வாழ வேண்டும் எனவும் பிறரைச் சுரண்டிவாழும் வாழ்க்கை கூடாதெனவும் கூறுகின்றார். இதனையே பாவேந்தரும், **"இருட்டறையில்**

**உள்ளதடா உலகம்! சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே! மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே! வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்? சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச் சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின் விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்."18** என்று பொருளாதார ஏற்றத்தாழ்வைச் சாடுகின்றார். பொருளாதாரப் பிரச்சனைகளால் மனிதமனங்களில் வெறுப்பு தோன்றுகிறது. உலக மக்கள் அனைவரும் எல்லா வளங்களையும் பெற்று வாழ்வது சாத்தியமாகாது. இருப்பினும் அவரவர் நிலைக்கேற்ப அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு· அதன் மூலம் தன்னிறைவு பெற்றவனாக மாற அறவழியாம் உழைப்பை உறுதியாகப்பெற்று வாழ்வதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். உழைப்பில்லாமல் எந்த ஒரு மனிதனாலும் முன்னேற முடியாது. சமுதாயத்தில் தன் ஒருவனை உழைப்புள்ளவனாக மாற்றும் போது உலக மக்கள் அனைவரும் உழைப்பால் ஆக்கம் பெற்றவர்களாகத் திகழ முடியும் உழைப்பே உயர்வுக்கு வழி என்ற இச்சிறந்த பண்பின் மூலம் மறவழி தோற்கடிக்கப்பட்டு· அறவழி மேலோங்கி நிற்கும் என உறுதி செய்யப்படுகின்றது. அப்படிப்பட்ட அறவழியே அன்பின் தொகுதியை இணைத்து கட்டப்படும் கயிறு போன்ற மேன்மைத் தன்மை பொருந்தியது.

**தொகுப்புரை**

நாட்டின் பொருளாதாரம் தான் மக்களின் வாழ்வாதாரத்தை நிலைபடுத்தும் தன்மை கொண்டது. எந்த நாடு கல்விக்காகவும் மருத்துவத்திற்காகவும் சுகாதாரச் செயல்களுக்காகவும் நிதியை பேரளவில் ஒதுக்கி, அதனை முதன்மையாக்குகின்றதோ அந்த நாடு பிற நாடுகளுடன் போட்டிப்போட்டு வளர்ச்சியைப் பெறக்கூடிய நிலையைப் பெறும். அக்காலத்தில் டைபாய்டு காய்ச்சலால் குறிஞ்சிமலர் அரவிந்தன் இறந்தான் என்ற செய்தி நாவலின் மூலம் அறிய முடிகின்றது. நாட்டில் தற்பொழுது கொரோனா தலைவிரித்தாடுகின்றது. இந்நிலை மாற வேண்டும். அறிவியல் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் சூழலில் மருத்துவ ஆராய்ச்சித்துறைகள் மேம்பட்டு வளர்ச்சியடைந்து புதிய நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைக் கண்டறிந்து மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். இதுவே நாட்டின் தலையாயக் கடமையாகும். மருத்துவம் சுத்தம் சுகாதாரம், நீர் மேலாண்மை ஆகியவற்றின் விழிப்புணர்வைக் கடைகோடி மக்களுக்கும் சென்றடைவதை இலக்காகக் கொள்ள வேண்டும். அமரர் தீபம் நா.பார்த்தசாரதி அவர்கள் எழுதிய சாகித்திய அகாதமி விருது பெற்ற நூலான குறிஞ்சி மலரில் அரவிந்தன் நோய்வாய்ப்பட்டு இறந்த செய்தியைக் கூறியுள்ள விதம் தற்பொழுது நாட்டில் நடக்கக்கூடிய அவலச் செய்தியை முன்பே அறிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி உணர வைத்துள்ளார். தனிமனித ஒழுக்கத்தைக் காற்றில் பறக்க விடுபவர்களாக அமைந்து பணம், புகழ் போன்றவற்றை மட்டும் மதித்துப் போற்றக்கூடியவர்களாக அதிலே அதிக விருப்பம் கொண்டு பொருளீட்டுவதில் நாட்டம் உடையவர்களாக இருப்பதைச் சிறு பாத்திரங்கள் மூலம் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். பொருளாதாரம் தான் ஒரு மனிதனைக் கட்டமைத்துக் கொள்ள உதவுகின்றது. இருப்பினும் எக்காலத்துக்கும் நம்பிக்கையும் நாணயமும் நேர்வழியால் குடிமக்களின் தனிமனித ஒழுக்கத்தை வளர்க்க காரணமாகும். ஆடம்பரத்தை விரும்புபவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ இயலாமல் பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவிக்கின்றனர். கல்வித்தகுதியால்

தெளிவு பெற்று துணிவோடு வாழ எண்ணுபவர்கள் பொருளாதாரச் சிக்கலில் அகப்படாமல் முன்னேறிச் செல்வர். கல்வியின் தரம் மேலோங்கி நிற்குமானால் அக்கல்வியின் வழி கிடைக்கும் தொழிலின் முதலீட்டைக் கொண்டு பொருள் நிலையின் முரண்பட்ட தடைகளைத் தாண்டிச் சென்று வெற்றியடைய முடியும் என்கிறார் நா.பா. „கல்வியே இல்லாத கலாசாரமுள்ளவர்களைக் கூடச் சகித்துக் கொள்ளலாம் கலாசாரமில்லாத கல்வியாளர்களைச் சகித்துக்கொள்வது மிகமிகச் சிரமமான காரியம்" என்ற படைப்பாளனின் சமுதாயப்பார்வை முரண் அடிப்படையில் அமைகின்றது. இப்படிப்பட்ட பொருளாதார முரண்பாடுகளைக் களைந்து வாழ முற்படுதலே சிறந்த வாழ்வியல் நிலையாகும்

**அடிக்குறிப்புகள்**

1. பரிமேலழகர் (உ.ஆ.), திருக்குறள், குறள்.17

2.அ.குணசேகரன், தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள், ப.49

3.மேலது., ப.49 க

4..பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.105

5.மேலது., ப.105

6.தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத்திறனாய்வியல், ப.363

7.க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.60

8. நா.பார்த்தசாரதி, பொன்விலங்கு, ப.190

9.பொன். கோதண்டராமன், ஆய்வு நெறிமுறைகள், ப.181

10.மேலது., ப.173 நா.பார்த்தசாரதி, குறிஞ்சிமலர், ப.321

11.மேலது., ப.168

12.மேலது., ப.168

13.மேலது., ப.314

14.நா.பார்த்தசாரதி, பொன்விலங்கு, ப.66

15.மா.பா.குருசாமி, இலக்கியத்தில் பொருளியல், ப.01

16. மேலது., ப.111

17.மேலது., ப.116

18.மேலது., ப.120

**பார்வை நூல்கள்**

[1]. *1.இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்* ,ஆசிரியர்: க. பஞ்சாங்கம் ,பதிப்பகம்: அன்னம் – அகரம் பதிப்பகம் ,பக்கங்கள்: 368 ,2016 பதிப்பு

[2]. 2. **அ. குணசேகரன்,** *தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள்* — நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2006

## Footnotes

1. Parimelazhagar (Comm.), Thirukkural, Kural 17

2. A. Gunasekaran, Family Disintegration in Tamil Novels, p. 49

3. Ibid., p. 49

4. K. Panchangam, Literature and Critical Theories, p. 105
5. Ibid., p. 105
6. Ta. A. Gnanamoorthy, Literary Criticism, p. 363
7. K. Panchangam, Literature and Critical Theories, p. 60
8. Na. Parthasarathy, Ponvilangu, p. 190
9. Pon. Kothandaraman, Research Methodologies, p. 181
10. Ibid., p. 173; Na. Parthasarathy, Kurinji Malar, p. 321
11. Ibid., p. 168
12. Ibid., p. 168
13. Ibid., p. 314
14. Na. Parthasarathy, Ponvilangu, p. 66
15. Ma. Pa. Gurusamy, Economics in Literature, p. 01
16. Ibid., p. 111
17. Ibid., p. 116
18. Ibid., p. 120

**BOOK REFERENCE :**

1. Literature and Critical Theories

Author: K. Panchangam, Publisher: Annam – Agaram Publications, Pages: 368, 2016 Edition

2. A. Gunasekaran, Family Disintegration in Tamil Novels — New Century Book House, 2006